சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள் அத்தனையையும் இன்னும் இரண்டு ஆண்டுகளுக்குள் கட்டி முடிக்க உத்தரவிட்டிருக்கிறார்கள். ஆகவே, அந்த அடிப்படையிலே இந்த ஆண்டில். இப்போது மாண்புமிகு உறுப்பினர் சொன்னதை அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 49, திரு. சோ. இராசேந்திரன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

49—

நிவாரணத் தொகை

***19713—திரு. சோ. இராசேந்திரன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) படித்து முடித்து வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துள்ள இளைஞர்களுக்கு வேலையில்லாக் கால நிவாரணத் தொகை மீண்டும் வழங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) படித்து முடித்துவிட்டு வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்திருக்கின்ற இளைஞர்களுக்கு வேலையில்லாக் கால நிவாரணத் தொகை வழங்குகின்ற செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எனவே, இவ்வினா எழ இடமில்லை.

திரு. சோ. இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்யப்பட்ட இளைஞர்களுக்கு நிவாரணத்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2003 மார்ச் 24]

தொகை வழங்குவது குறித்த கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லையென்று அறிவித்துள்ளார்கள். படித்த இளைஞர்கள் வேலைவாய்ப்பு அலுவலகங்களிலே பதிவு செய்துவிட்டு வேலைவாய்ப்பிற்காக எதிர்நோக்கியிருக்கின்ற இந்த நேரத்திலே அவர்களுக்குப் பல்வேறு காலகட்டங்களிலே எழுகின்ற சில பிரச்சினைகளை நிவர்த்தி செய்யும்வண்ணம் அவர்களுக்கான நிவாரணத் தொகையை வழங்குவதற்கு அரசு கவனம் செலுத்தி, வழங்குவதற்குத் தேவையான முயற்சிகளை எடுக்குமா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படித்து முடித்துவிட்டு பதிவுசெய்து இருப்பவர்களில் கண் பார்வையற்ற பதிவுதாரர்களுக்கு இப்போது நிவாரணத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. அதற்காக மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு இந்த ஆண்டு 30 இலட்சம் ரூபாயை ஒதுக்கித் தந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கு. பிச்சாண்டி.

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படித்து முடித்துவிட்டு வேலைவாய்ப்பு அலுவலகங்களில் இதுவரை பதிவு செய்திருக்கின்ற இளைஞர்களுடைய எண்ணிக்கை எவ்வளவு? இப்பொழுது வேலைவாய்ப்பே இல்லாமல் இருக்கின்ற காரணத்தால் பதிவு செய்துவிட்டு பல்லாண்டு காலமாக காத்திருக்கின்ற இளைஞர்களுக்கு ஏதேனும் மறுவாழ்வளிக்க அரசு முன்வருமா? அல்லது மத்திய அரசாங்கம் 1 கோடி பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கிறது என்று சொல்லியிருப்பதைப்போல இந்த அரசில் வேலைவாய்ப்பு அளிப்பதற்கான திட்டம் ஏதேனும் உள்ளதா என்பதைத் தெரிவிக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படித்து முடித்துவிட்டு வேலைவாய்ப்பு அலுவலகங்களிலே இதுவரை 50,82,966 பேர் பதிவு செய்திருக்கிறார்கள். இவர்களிலே மெட்ரிகுலேஷன் முடித்துவிட்டு 13,01,134 பேர்களும் Pre—University, H.S.C., படித்தவர்கள் 9,79,414 பேர்களும், டிப்ளமா முடித்தவர்கள் 3,93,437 பேர்களும் பட்டப் படிப்பு படித்தவர்கள் 5,42,393 நபர்களும், முதுநிலைப் பட்டதாரிகள் 1,66,588 பேர்களும்,

எஸ்எஸ்எல்சி.-க்கு கீழே—below எஸ்எஸ்எல்சி.—பதிவுசெய்தவர்கள் சுமார் 17 லட்சம் பேர்களும், ஆக மொத்தம் 50,82,966 பேர்கள் பதிவு செய்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மகேந்திரன்.

திரு. கே. மகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் முதல்வர் மறைந்த தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தமிழகத்தினுடைய ஆட்சி அதிகாரத்திலே இருந்தபோது 1981 ஆம் ஆண்டு தமிழகத்திலே வேலைவாய்ப்பு அலுவலகங்களிலே பதிவு செய்து வேலையில்லாமல் இருக்கக்கூடிய இளைஞர்களுக்கு 5 ஆண்டு மூப்பின் அடிப்படையிலே வேலையில்லாக் கால நிவாரணம் என்பது வழங்கப்பட்டிருந்தது. இப்பொழுது இந்தியாவினுடைய ஒரு மாநிலமாக இருக்கக்கூடிய மேற்கு வங்க மாநிலத்திலும் வேலையில்லாக் கால நிவாரணம் என்பது இளைஞர்களுக்கு வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. பல்வேறு வளர்ச்சியடைந்த நாடுகளிலும் வேலையில்லாக் கால நிவாரணம் என்பது வழங்கப்படக்கூடிய காரணத்தினால், தமிழகத்திலும் எம்.ஜி.ஆர். அவர்களால் வழங்கப்பட்ட வேலையில்லாக் கால நிவாரணம் என்பது மீண்டும் வழங்கப்படுமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1980 ஆம் ஆண்டு டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது இப்படி வழங்கப்பட வேண்டுமென்று உத்தரவு இடப்பட்டு தொடர்ந்து வழங்கப்பட்டு வந்தது. அப்போது வேலையில்லாமல் பதிவு செய்தவர்களுடைய எண்ணிக்கை மிகக் குறைவாக இருந்தது. மொத்தம் சுமார் 7 இலட்சம் பேர்கள்தான் அன்றைக்குப் பதிவு செய்திருந்தார்கள். அவர்களுக்கு வழங்குவதற்கு ஏறத்தாழ 74 கோடி ரூபாய் அரசினுடைய பணம் செலவழிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இப்பொழுது 50 இலட்சம் பேர் பதிவு பெற்றிருக்கிறார்கள் என்பதால், அதை வழங்குவதற்கான வாய்ப்புகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலம் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. சி. கருணாகரன்.

2003 மார்ச் 24]

திரு. கே.சி. கருணாகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வேலையில்லாத் திண்டாட்டம் என்பது சமூகத்தினுடைய மிகப் பெரிய தொற்றுநோயாக தீவிரப்பட்டு வருகிறது. அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபோல் 50 இலட்சத்திற்கும் மேற்பட்டோர் பதிவு செய்து கொண்டிருக்கின்றார்கள். வேலை தேடித் தரும் ஸ்தாபனங்கள், வேலையில் இல்லாதோரின் கணக்கைச் சொல்கிற ஸ்தாபனங்களாக இப்போது இருந்துகொண்டிருக்கின்றன. ஆகவே, இந்த 50 இலட்சம் பேர்களுக்கும் நிவாரணம் என்பது சாத்தியம் இல்லாவிட்டாலுங்கூட இதை வகைப்படுத்தி எத்தனை ஆண்டுகளாக, எவ்வளவு பேர் பதிவு செய்திருக்கிறார்கள்; என்று பார்த்து, அவர்களில் மிகவும் வறிய நிலையிலே இருக்கிறவர்களைப் பிரித்து எடுத்து அடையாள பூர்வமாகவாவது இந்த அரசு இந்த நிவாரணத் தொகையைக் கொடுப்பது என்பது வேலையில்லாத இளைஞர்கள்மீது பரிவும் கருணையும் காட்டுகிற அடிப்படையிலே அது இருக்கும். அவ்வாறு செய்ய முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலையில்லாமல் பதிவு செய்திருக்கின்ற நபர்களுக்கு எல்லாம் தகுதியான பயிற்சியை அளித்து, அவர்களே வேலை தேடிக்கொள்ளக்கூடிய அளவிற்கு சிறந்த பயிற்சிகளை ஒவ்வொரு வேலைவாய்ப்பு அலுவலகத்திலும் மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுடைய ஆலோசனையின்படி நாங்கள் அளித்துக் கொண்டிருக்கிறோம். அந்தப் பயிற்சியைப் பெறுகிறவர்கள், தாங்களே வேலையைப் பெறக்கூடிய வாய்ப்பையும் பல்வேறு வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலமாகப் பெற்று வருகிறார்கள்.

அதோடு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், வறியவர்களைப் பிரித்து, அவர்களுக்கு அரசு உதவுமா என்று கேட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலேதான் பார்வையற்ற பதிவுதாரர்களுக்குத் தொடர்ந்து நிவாரணத்தை டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு வழங்கிக் கொண்டிருக்கிறது என்பதைப் பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 50, திருமதி சி.எம். சூரியகலா, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.